<u>**பொள்ளாச்சி நகராட்சி**</u>

<u>**29.10.2020 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட தீர்மானம்**</u>

**2448)** பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணியின் ஒரு பகுதியாக உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து குடியிருப்புகளுக்கும் ஊட்டச்சத்து மாத்திரை மற்றும் கபசுர குடிநீர் பொட்டலங்கள் அடங்கிய பெட்டகத்தினை பொது நிதியிலிருந்து வழங்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் உத்திரவு பிறப்பித்ததன் பேரில் மேற்காண் மருந்துகள் கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ.13,00,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி 07.08.2020ஆம் தேதி விலைப்புள்ளி கோரி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

**விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:-**

**கபசுர குடிநீர்:**

| Sl.no | Name | Estimated Amount |
|---|---|---|
| 1. | M.B.Pharma Siddha & Ayurvedav Pharma,<br>Madurai. | Rs. 33/- (50gm pocket) |
| 2. | Sri Harshini Herbals,<br>113, T.P.K.Road<br>Madurai. | Rs. 38/- (50gm pocket) |
| 3. | Rackshely Herbals Labs,<br>1/629, Pudukkottai Road,<br>Trichy. | Rs. 37/- (50gm pocket) |

**ஜிங்க் மற்றும் மல்டிவிட்டமின்**

| Sl.no | Descriéion | Kniss Laboratories (P) LTD Chennai | Success Pharma Pollachi |
|---|---|---|---|
| 1. | Zinc | Rs.12.90/- (100 nos) | Rs. 5.88/- (10 nos) |
| 2. | Multivitamin | Rs.29.50/- (100 nos) | Rs. 20.75/- (10 nos) |

**ஆர்சனிக் ஆல்பம்**

| Sl.no | Name | Estimated Amount |
|---|---|---|
| 1. | Dr, Santhana‡s World Class Homeopathy medicals<br>Vavilla Complex,<br>Tiruppur. | Rs. 3.50/- (30-Pills-1 Draham) |
| 2. | Geneva Yuva,<br>Nehru Street,<br>Tiruppur. | Rs. 4.50/- (30-Pills-1 Draham) |
| 1. | R.R.Associates,<br>203,First Floor,<br>Trichy. | Rs. 4.00/- (30-Pills-1 Draham) |

**பாக்ஸ் & பேக்:-**

| Sl.no | Name | Printing Box | Printing Bag |
|---|---|---|---|
| 1. | Brand Media,<br>Thiyagi Kumaran St,<br>P.N.Pudur,<br>Coimbatore. | Rs.7.50/- | Rs.7.00/- |
| 2. | Color Drops,<br>Thadagam Road,<br>Coimbatore. | Rs.8.50/- | Rs.8.00/- |
| 3. | V.K.Ads,<br>Palani boyar St,<br>Kurichi. | Rs.9.00/- | Rs.8.50/- |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் கபசுர குடிநீருக்கு குறைவான விலைப்புள்ளி வழங்கிய M.B.Pharma Siddha & Ayurvedav நிறுவனத்தின் விலைப்புள்ளியும், ஜிங்க் மற்றும் மல்டிவிட்டமின் மாத்திரைகளுக்கு Kniss Laboratories (P) LTD விலைப்புள்ளியும், ஆர்சனிக் ஆல்பம் மாத்திரைகளுக்கு Dr, Santhana‡s World Class Homeopathy medicals அவர்களின் விலைப்புள்ளியும், Box and Bag Brand Media அவர்களின் விலைப்புள்ளியையும் ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகளின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.3344 /2020 /எச்2**

**2449)** பொள்ளாச்சி நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியார்களும் பணி நேரத்தின் போது புகைப்பட அடையாள அட்டை அணிய தெரிவித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடமிருந்து சுற்றறிக்கை (ந.க.எண்.1128/2020/அ1, நாள்–16.03.2020) வரப்பெற்றுள்ளது. அலுவலக மூலமாக ஒரே மாதிரியான அடையாள அட்டை பணியாளர்களுக்கு வழங்க வேண்டி உள்ளதால், விலைப்புள்ளிகள் கோரவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பணியின் அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.3821/2020/சி1**

**2450)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில், நகரளவு வார்டு.H, பிளாக் எண்.23, நகரளவு எண்.168/4-ல் உள்ள 57.75 சென்ட் பரப்பளவுள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு அனுமதி கோரி மனுதாரர் திரு.எம்.பழனிச்சாமி என்பவரின் 23.09.2019-ல் விண்ணப்பம் அளித்ததன்பேரில், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கோவை அவர்களின் ந.க.எண்.1975/2020/கோம-3, நாள்.06.07.2020-ம் தேதிய கடிதத்தில், குடியிருப்பு மனைப்பிரிவுக்கு சாலை அமைப்பு வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்தேச மனைப்பிரிவுக்கான சாலை அமைப்பு வரைபடத்தின்படி உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைக்கான இடத்தினை நகராட்சியின் பராமரிப்புக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்து மனுதாரர் 10.07.2020-ல் கடிதம் அளித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:**<br>1. மேற்கண்ட மனைப்பிரிவில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் ஆகிய வசதிகள் நல்ல முறையில் செய்யப்பட்டுள்ளது என 14.09.2020 ஆம் தேதிய கடிதத்தில் நகராட்சி பொறியாளர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.<br>2. மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள சாலையில் தெரு விளக்குடன் கூடிய ஒரு மின்கம்பம் அமைப்பதற்கு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.20,689/- மனுதாரரால் செலுத்தப்பட்டது. (ரசீது எண்.0875082, நாள்.30.09.2020).<br>3. மேற்படி சாலையில் 90 எம்.எம் பி.வி.சி குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்கப்பட்டது என 06.10.2020ம் தேதிய குறிப்பில் நகராட்சி பொறியர் தெரிவித்துள்ளார்.<br>4. எனவே, மேற்கண்ட மனைப்பிரிவில் சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சாலைக்கான இடம் மற்றும் பொது உபயோக இடம் ஆகியவற்றினை நகராட்சியின் பராமரிப்புக்கு தானசாசனம் மூலம் ஏற்று இறுதி ஒப்புதல் வழங்கலாம்.<br><br>**ந.க.எண்.4111/2020/அ6** |
| **2451)** | **பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகன எண்.TN41 T 4279 வாகனத்திற்கு பழுது பார்த்தல் மற்றும் தகுதிச்சான்று பெறும் பணிக்கு 13.10.2020 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.**<br>**விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:–**<br><table><tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th></tr><tr><td>1.</td><td>M/s. ஜே.டி.அன்ட் கோ,<br>160, கோவை ரோடு,<br>பொள்ளாச்சி.</td><td>ரூ.2,58,715/–</td></tr><tr><td>2.</td><td>பீ.பி.செரிப் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>25/67, ஏ.பி.டி ரோடு,<br>பொள்ளாச்சி</td><td>ரூ.3,21,786/–</td></tr></table><br>**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. ஜே.டி.அன்ட் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.**<br>**அலுவலகக்குறிப்பு:**<br>**1. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. ஜே.டி.அன்ட் கோ, 160, கோவை ரோடு,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**<br>**ந.க.எண்.3107/2020/எச்2** |
| **2452)** | மாவட்ட ஆட்சித்தலைவர், கோயமுத்தூர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.525/2019/அ3, நாள்.26.09.2020-ன்படி ஜல் சக்தி அபியான் திட்டத்தின்கீழ் பொள்ளாச்சி நகராட்சியில் ஜுலை-2019 முதல் நவம்பர்-2019 வரை நிலத்தடி நீர் வளம் குறித்து மத்திய நீர்வளத் துறையிலிருந்து திட்ட வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இதர அலுவலர்களால் கள ஆய்வுகள் மேற்கொள்ள தனியார் வாடகை வாகனங்கள் அமர்த்தி ஆய்வு மேற்கொண்ட வகையில் திருவாளர்கள் “நோயல் டூர்ஸ் அன்டு டிராவல்ஸ்” என்ற நிறுவனத்தின் மூலம் பயன்படுத்தப்பட்ட 1660 கிலோ மீட்டருக்கு செலவினத் தொகை ரூ.25,766/-ஐ வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்திற்கு ரூ.25,766/-ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம் |

| | |
|---|---|
| | **ந.க.எண்.4091/2013/ஜி1** |
| **2453)** | நகராட்சிக்கு சொந்தமான அண்ணா கூடுதல் பேருந்து நிலையம் முதல் தளக் கடை எண்.01 ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 27.09.2019 ம் நாளிட்ட திரு.காமராஜன் என்பவரின் மாத வாடகை தொகை ரூ.1610/- க்கான ஒப்பந்தப்புள்ளி நகர் மன்ற தீர்மானம் எண்.1844 நாள்.30.09.2019 ல் ஏற்கப்பட்டு 12 மாத வாடகை தொகை செலுத்திட தெரிவிக்கப்பட்டதில் அன்னாரால் கொரோனா நோய் தொற்று காரணமாக தொகை செலுத்த இயலவில்லை என தெரிவித்து 21.10.2020-ல் விண்ணப்பித்துள்ளார். அன்னாரது விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1) இக்கடைகளுக்கு செலுத்தப்பட்டுள்ள வைப்புத்தொகை ரூ.10,000/- பறிமுதல் செய்யலாம்.<br>2) அன்னாரது ஒப்பந்தபுள்ளியை ரத்து செய்து மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளலாம்.<br>**ந.க.எண்.1131/2020/அ6** |
| **2454)** | நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள கடைகளுக்கு மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி 13.10.2020-ல் கோரப்பட்டதில் கீழ்காணும் கடைக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. |

| வ.எண் | கடையின் விபரம் | பெயர் / முகவரி | மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | அண்ணா மத்திய கூடுதல் பேருந்து நிலையம் முதல் தளக்கடை எண்.13 | திரு.ஜி.கார்த்திகேயன், த/பெ கணபதி, 3/50 நல்லூர், ஜமீன் முத்தூர்(அ), பொள்ளாச்சி | 1850 |

மேற்காண் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காண் கடைகள் சுமார் 43 முறைகளுக்கு மேல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், 2014-ம் ஆண்டிற்கு முன்னர் உள்ள காலங்களில் இருந்து கடையானது காலியாக உள்ளது. இதன் அருகாமையில் உள்ள கடை எண்.12 மற்றும் 15 ஆகிய கடைகள் மாத வாடகை தொகை ரூ.1550/- க்கும் மற்றும் கடை எண்.10, 11 ஆகிய கடைகள் மாத வாடகை தொகை ரூ.1850/-க்கும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. நகராட்சியின் வருவாயினை பெருக்கும் வகையில் தற்போது கடை எண்.13க்கு, மாத வாடகை தொகை ரூ.1850/- வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்

**ந.க.எண்.1131/2020/அ6**

**2455)** நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள கடைகளுக்கு மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி 29.10.2020-ல் கோரப்பட்டதில் கீழ்காணும் கடைகளுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | கடையின் விபரம் | பெயர் / முகவரி | மாத வாடகை |
|---|---|---|---|

| | | | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | அண்ணா மத்திய பேருந்து நிலைய கடை எண்.23 | திரு.ஆர்.துரை சுப்ரமணியம், 18/5 ஜுபிலி கிணறு வீதி, பொள்ளாச்சி | 18,000 |
| 2 | காந்தி மார்க்கெட் தினசரி காயக்றி வியாபார சந்தை மொத்த வியாபார கடை எண்.52 | திரு.கே.புருஷோதமன், த/பெ கிருஷ்ணசாமி, 104 திருநீலகண்டர் வீதி, பொள்ளாச்சி | 10,100 |

மேற்காண் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1) அண்ணா மத்திய பேருந்து நிலையம் கடை எண்.23, 01.06.2019 முதல் காலியாக உள்ளதாலும் இறுதியாக தொகை ரூ.16,767/- க்கு மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இக்கடைக்கு 14 முறைக்கு மேல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தற்போது வரப்பெற்ற திரு.ஆர்.துரை சுப்ரமணியம் என்பவரின் மாத வாடகை தொகை ரூ.18,000/- க்கான ஒப்பந்தப்புள்ளி கடந்தாண்டு தொகையினை விட கூடுதலாக உள்ளதால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2) காந்தி மார்க்கெட் மொத்த வியபர கடை எண்.52, 01.04.2019 முதல் காலியாக உள்ளதாலும் இறுதியாக தொகை ரூ.10,000/- க்கு மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இக்கடைக்கு 10 முறைக்கு மேல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தற்போது வரப்பெற்ற திரு.கே.புருஷோதமன் என்பவரின் மாத வாடகை தொகை ரூ.10,100/- க்கான ஒப்பந்தப்புள்ளி கடந்தாண்டு தொகையினை விட கூடுதலாக உள்ளதால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.1131/2020/அ6**

**2456)** **பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகன எண்.TN41 AH 2138 வாகனத்திற்கு பழுது பார்த்தல் மற்றும் தகுதிச்சான்று பெறும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.**

**விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:–**

| வ.எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| **1.** | **M/s. ஜே.டி.அன்ட் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி.** | **ரூ.93,810/–** |
| **2.** | **பீ.பி.செரிப் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், 25/67, ஏ.பி.டி ரோடு, பொள்ளாச்சி** | **ரூ.99,120/–** |

**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. ஜே.டி.அன்ட் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.**

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

1. **குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. ஜே.டி.அன்ட் கோ, 160, கோவை ரோடு,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**

**ந.க.எண்.3582/2020/எச்2**

**2457)** **பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகன எண்.TN41 AM 2687 வாகனத்திற்கு பழுது பார்த்தல் மற்றும் தகுதிச்சான்று பெறும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.**

**விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:–**

| வ.எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1. | M/s. ஜே.டி.அன்ட் கோ,<br>160, கோவை ரோடு,<br>பொள்ளாச்சி. | ரூ.1,89,626/– |
| 2. | பீ.பி.செரிப் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>25/67, ஏ.பி.டி ரோடு,<br>பொள்ளாச்சி | ரூ.2,03,845/– |

**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. ஜே.டி.அன்ட் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு:**

1. **குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. ஜே.டி.அன்ட் கோ, 160, கோவை ரோடு,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**

**ந.க.எண்.3583/2020/எச்2**

**2458)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29280/2020/WB, நாள்–25.09.2020ல் பொள்ளாச்சி நகராட்சியில் செயல்பட்டு வரும் வரிவசூல் மையங்களுக்கான இணையதள சேவைக்கான அரையாண்டிற்கான கட்டணம் (UTIS - Connectivity Charges, MPLS VPN) (01.10.2019 முதல் 31.12.2019 மற்றும் 01.01.2020 முதல் 31.03.2020) 78137+78137=156274/- தொகை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையை செலுத்தவும், மேலும் ஓராண்டிற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.350000/-ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.4627 /2018 /பி4**

**2459)** இந்நகராட்சியின் 2019–2020 ஆம் ஆண்டின் வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் நிதி மற்றும் ஆரம்பக்கல்வி நிதி கணக்குகளை பதிவேடுகளுடன் இணக்கம் செய்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி கணக்குகளை பட்டய கணக்கர் மூலம் முடித்து இணக்கம் செய்யவும் அதற்காகும் செலவினம் ரூ.50000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**2460)** **பொள்ளாச்சி நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், மலேரியா பணியாளர்கள், பொறியர் பிரிவு பணியாளர்கள், குடிநீர் பிரிவு பணியாளர்கள், தலைமை நீரேற்று நிலையப் பணியாளர்கள் மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளார்கள் ஆகியோர்களுக்கு 2020–2021ம் ஆண்டுக்கான சீருடைகள் கொள்முதல் செய்து விநியோகம் செய்யவும் தையற்கூலி உட்பட அனைத்திற்கும் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.5,00,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலகக் குறிப்பு:

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.4337/2018/எச்2**

**2461)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு வார்டு G, பிளாக் எண்.8, நகரளவு எண்.855ல் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவான N.V.M. கார்டன் மனைப்பிரிவில், மனை எண்.15ன் உரிமையாளர் திருமதி.எஸ்.கிருத்திகா என்பவர் அபிவிருத்திக் கட்டணமாக ரூ.36250/—ஐ ICICI வங்கியிலும், வரன்முறைக் கட்டணம் ரூ.13050/—ஐ பாரத ஸ்டேட் வங்கிக் கணக்கிலும் செலுத்தியுள்ளார். மேலும் வரன்முறைப்படுத்துதலுக்குரிய கட்டணம் ரூ.13050/—ஐ நகராட்சி கணக்கிலும் தவறுதலாக செலுத்தியுள்ளார்.

எனவே, மனையினை வரன்முறைப்படுத்த வரன்முறைப்படுத்துதலுக்குரிய கட்டணத்தை ICICI வங்கியில் செலுத்திய பின்னரும் மீண்டும் நகராட்சி கணக்கில் கூடுதலாக செலுத்தப்பட்ட வரன்முறைப்படுத்துதல் கட்டணம் ரூ.13050/—ஐ மனையின் உரிமையாளருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2462)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் பழுதான 5 HP Vaccum pumpset மாற்றி புதிதாக பொருத்தும் பணிக்கு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு 29.09.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/S.KPS Engineering Constructions, Metturdam. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.19% குறைவு. |
| 2. | M/S.Ramu Rewinding Works, Udumalpet. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.95% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.19% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.KPS Engineering Constructions, Metturdam.அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.19% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.KPS Engineering Constructions, Metturdam அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 3815/2020/இ3**

**2463)** பொள்ளாச்சி நகராட்சி ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் (ICDS) 2019—20—ன் கீழ் நகராட்சிக்கு சொந்தமான டி.கோட்டாம்பட்டி அங்கன்வாடி மையத்தில் மராமத்து பணிகள் செய்தல் பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 25.09.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவு. |
| 2. | திரு:ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.79% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

| | |
|---|---|
| | 1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.<br>2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.10% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்: 0132/2020/இ1** |
| 2464) | **பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகன எண்.TN 41 AU 6328 வாகனத்திற்கு பழுது பார்த்தல் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.**<br>**விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:—**<br><table><tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th></tr><tr><td>1.</td><td>M/s. ஜே.டி.அன்ட் கோ,<br>160, கோவை ரோடு,<br>பொள்ளாச்சி.</td><td>ரூ.15,340/—</td></tr><tr><td>2.</td><td>பீ.பி.செரிப் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>25/67, ஏ.பி.டி ரோடு,<br>பொள்ளாச்சி</td><td>ரூ.17,346/—</td></tr></table><br>**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. ஜே.டி.அன்ட் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.**<br>**அலுவலகக்குறிப்பு:**<br>**1. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. ஜே.டி.அன்ட் கோ, 160, கோவை ரோடு,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**<br>**2. பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**ந.க.எண்.3425/2020/எச்2** |
| 2465) | **பொள்ளாச்சி நகராட்சி பொது குகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்படும் வாகனம் TN41 AP 2280 வாகனத்திற்கு பேட்டரி புதிதாக மாற்றம் செய்ய நடைபெற்ற விலைப்புள்ளியில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.**<br>விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு:-<br><table><tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை</th></tr><tr><td>1.</td><td>என். மகாலிங்கம் & கம்பெனி,<br>102, கோயம்புத்தூர் ரோடு,<br>பொள்ளாச்சி</td><td>ரூ.6000/—</td></tr><tr><td>2.</td><td>நிவிராஜ் பேட்டரீஸ்<br>1, எஸ்.எஸ்.காம்ப்ளக்ஸ்,<br>அய்யப்பன் கோவில் அருகில்,<br>பொள்ளாச்சி.</td><td>ரூ.6200/—</td></tr></table><br>**வரப்ற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள என்.மகாலிங்கம் & கம்பெனி 102, கோயம்புத்தூர் ரோடு, பொள்ளாச்சி நிறுவனத்திற்கு நகர்மன்ற முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.** |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

2. **மன்றம் அனுமதிக்கலாம்**
3. **பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமுதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.3482/2020/எச்2**

**2466)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மகேந்திரா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனம் மீதான வழக்கு எண் (W.P.No12631/2019) சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வழக்கு தொடர்பாக நீதிமன்ற உத்திரவு வரப்பெற்றுள்ளது. மேற்படி வழக்கு நடத்தியமைக்கான வழக்குக் கட்டணம் ரூ.15000/– தொகையினை திரு.ஆனந்த், அரசு வழக்கறிஞர், சென்னை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 344 /2018 / எச்2**

**2467)** பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்திய பேருந்து நிலையம் மற்றும் கூடுதல் பேருந்து நிலையத்தில் மராமத்து பணி மேற்கொண்டு புதுப்பித்தல் பணிக்கு ரூ.9.10 இலட்சம் மதிப்பீட்டிற்கு 04.08.2020ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக மறுஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு:ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.24% குறைவு. |
| 2. | திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.50% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.24% குறைவானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு:ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.24% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு:ஆர்.சுப்ரமணியம்,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்: 2988/2020/இ1**

**2468)** பொள்ளாச்சி நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் 2019–20–ன் கீழ்க்கண்ட இடங்களில், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள, மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | நடராஜ் மணியகாரர் காலணியில் அங்கன் வாடி மையம் கட்டுதல். | 9.00 |
| 2. | அன்னபூரணியம்மாள் லே அவுட் வார்டு எண்: 32–ல் அங்கன் | 9.00 |

| | |
|---|---|
| | வாடி மையம் கட்டுதல். | |
| 3. | புகை வண்டி நிலையத்தில் (A.B.T பள்ளிவளாகம்) அங்கன் வாடி மையம் கட்டுதல். | 9.00 |

மேற்காணும், பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின், செயல்முறைகள் ந.க.எண்: 438/2018/ஆ2 நாள்: 26.08.2020–ம் கடிதத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வரப்பெற்ற கடித நகல் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்க, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்: 3252/2020/இ1**